# ஸ்ரீ சாயி பாபா
# துதி மாலை



**ஸ்ரீ சாயிபிரச்சார் பரிவார்**

**11/11, 6வது தெரு, ஆண்டவர் நகர், கோடம்பாக்கம்**

**சென்னை - 600 024. போன்: 044 - 6544 9766**

**செல்: + 91 98408 18595, 90032 60610**

E-maild: ssppbabamama@gmail.com

Web: www.srisaipracharpariwar.org.



**விண்ணிலிருந்து மண்ணிறங்கி வந்த**

**இந்த அற்புத தெய்வத்தின் பொற்பாதங்களில்**

**ஓர் சாயிபக்தனின் சிறிய**

**சமர்ப்பணம்**

# ஸ்ரீ ஸாயி தியான சுலோகம்

ப்ரஹ்மானந்தம் பரமசுகதம்
கேவலம் ஞான மூர்த்திம்
த்வந்த்வாதீதம் ககன ஸத்ருசம்
தத்வ மஸ்யாதி லக்ஷ்யம்
ஏகம் நித்யம் விமலமசலம்
ஸர்வதீ ஸாக்ஷிபூதம்
ஸாயி நாதம் த்ரிகுண ரஹிதம்
ஸத்குரும் தம் நமாமி
நமஸ்தே ஸ்ரீ ஸாயி நாதாய
மோஹதந்த்ர வினாஸினே
குரவே புத்தி போதாய
போதமாத்ர ஸ்வரூபிணே

## ஓம் சாயி ஸ்ரீ சாயி ஜெய ஜெய சாயி

ப்ரதமம் ஸாயி நாதாய
த்விதீயம் துவாரகா மாயினே
த்ரிதீயம் தீர்த்த ராஜஞ்ச
சதுர்ததம் பக்த வத்சலே
பஞ்சமம் பரமாத்மாய
ஷஷ்டிஞ்ச ஷீரடி வாஸனே
ஸப்தமம் ஸத்குரு நாதாய
அஷ்டமம் அநாத நாதனே
நவமம் நிராடம்பராய
தஸமம் தத்தாவதாரினே

**ஏதாநி தஸ நாமானே**

**த்ரிஸந்தியம் ய படேந் நித்யம்**

**ஸர்வ கஷ்ட பயாந் முக்தே**

**ஸாயீ பாபா நமோஸ்துதே**

## ஓம் ஸாயி அங்க பூஜா

**ஓம் பரமாத்மனே நம : பாதௌ பூஜயாமி**

**ஓம் லோக நாதாய நம : குல்பௌ பூஜயாமி**

**ஓம் ஸித்தேஸ்வராய நம : ஜங்கே பூஜயாமி**

**ஓம் யோகஸ்வராய நம : ஜானுனீ பூஜயாமி**

**ஓம் புருஷோத்தமாய நம : ஊரும் பூஜயாமி**

**ஓம் அசிந்த்யாய நம : கடிம் பூஜயாமி**

**ஓம் ஸத்புருஷாய நம : குக்ஷிம் பூஜயாமி**

**ஓம் வாஸுதேவாய நம : நாபிம் பூஜயாமி**

**ஓம் ஸுக்ஷ்மாய நம : வக்ஷஸ்தலம் பூஜயாமி**

**ஓம் அபயப்ரதாய நம : ஹஸ்தான் பூஜயாமி**

**ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம : கண்டம் பூஜயாமி**

**ஓம் க்ருஷ்ண ராம சிவ மாருத்யாதிரூபாய**

**நம: முகம் பூஜயாமி**

**ஓம் வெங்குஸரமணாய நம : நாஸிகான் பூஜயாமி**

**ஓம் ஜீவதாராய நம : நேத்ரா பூஜயாமி**

**ஓம் தத்தாத்ரேயாய நம : ஸ்ரோத்ரா பூஜயாமி**

**ஓம்ஸேஷஸாயினே நம : கபாலம் பூஜயாமி**

**ஓம் பரப்ருஹ்மணே நம : கபர்தம் பூஜயாமி**

**ஓம் லக்ஷ்மி நாராயணாய நம : ஸிரௌ பூஜயாமி**

**ஓம் ஸ்ரீ ஸாயிநாதாய நம : ஸர்வாணி அங்காணி பூஜயாமி.**

# ஸ்ரீ ஸாயிராம் அஷ்டோத்ர சத நாமாவளி

**ஓம் ஸ்ரீஸாயிநாதாய நம**

**ஓம் ஸ்ரீலக்ஷ்மீநாராயணாய நம**

**ஓம் ஸ்ரீ கிருஷ்ண ராம சிவ மாருத்யாதி ரூபாய நம:**

**ஓம் சேஷ சாயினே நம:**

**ஓம் கோதாவரீ தடசீரடி வாஸினே நம:**

**ஓம் பக்த ஹ்ருதயாலயாய நம:**

**ஓம் ஸர்வ ஹ்ருத்வாஸினே நம:**

**ஓம் பூதாவாஸாய நம:**

**ஓம் பூதபவிஷ்யத் பாவ வர்ஜிதாய நம:**

**ஓம் காலாதீதாய நம:** 10

**ஓம் காலாய நம:**

**ஓம் காலகாலாய நம:**

**ஓம் காலதர்ப தமனாய நம:**

**ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம:**

**ஓம் அமர்த்யாய நம:**

**ஓம் மர்த்யாபயப்ரதாய நம:**

**ஓம் ஜீவாதாராய நம:**

**ஓம் ஸர்வாதாராய நம:**

**ஓம் பத்தாவன ஸமர்த்தாய நம:**

**ஓம் பக்தாவன ப்ரதிக்ஞாய நம:** 20

**ஓம் அன்னவஸ்த்ரதாய நம:**

**ஓம் ஆரோக்யக்ஷேமதாய நம:**

**ஓம் தனமாங்கல்யப்ரதாய நம:**

**ஓம் ருத்திஸித்திதாய நம:**

**ஓம் புத்ர மித்ர களத்ர பந்துதாய நம:**

**ஓம் யோகக்ஷேமவஹாய நம:**

**ஓம் ஆபத்பாந்தவாய நம:**

**ஓம் மார்க்கபந்தவே நம:**

**ஓம் புக்திமுக்திஸ்வர் காபவர்கதாய நம:**

**ஓம் ப்ரியாய நம:** 30

**ஓம் ப்ரீதிவர்தனாய நம:**

**ஓம் அந்தர்யாமினே நம:**

**ஓம் ஸச்சிதாத்மனே நம:**

**ஓம் ஆனந்தாய நம:**

**ஓம் ஆனந்ததாய நம:**

**ஓம் பரமேச்வராய நம:**

**ஓம் ப்ரப்ரஹ்மணே நம:**

**ஓம் பரமாத்மனே நம:**

**ஓம் ஞானஸ்வரூபிணே நம:**

**ஓம் ஜகத பித்ரே நம:** 40

**ஓம் பக்தானாம் மாத்ரு தாத்ரு பிதாமஹாய நம:**

**ஓம் பக்தாபயப்ரதாய நம:**

**ஓம் பக்த பராதீனாய நம:**

**ஓம் பக்தானுக்ரஹ காதராய நம:**

**ஓம் சரணாகதவத்ஸலாய நம:**

**ஓம் பக்தி சக்தி ப்ரதாய நம:**

**ஓம் ஞான வைராக்யதாய நம:**

**ஓம் ப்ரேமப்ரதாய நம:**

**ஓம் ஸம்ஸய ஹ்ருதய தௌர்பல்ய பாபகர்ம**

**வாஸனா க்ஷயகராய நம:**

**ஓம் ஹ்ருதய க்ரந்திபேதகாய நம:** 50

**ஓம் கர்மத்வம்ஸினே நம:**

**ஓம் சுத்த ஸத்வஸ்திதாய நம:**

ஓம் குணாதீத குணாத்மனே நம:

ஓம் அனந்த கல்யாண குணாய நம:

ஓம் அமித பராக்ரமாய நம:

ஓம் ஜயினே நம:

ஓம் துர்தர்ஷாக்ஷோப்பாய நம:

ஓம் அபராஜ் தாய நம:

ஓம் த்ரிலோகேஷு அஸ்கந்திதகதயே நம:

ஓம் அசக்யரஹிதாய நம: 60

ஓம் ஸர்வசக்தி மூர்த்தயே நம:

ஓம் ஸுருபஸுந்தராய நம:

ஓம் ஸுலோசனாய நம:

ஓம் பஹுருப விஸ்வ மூர்த்தயே நம:

ஓம் அரூபாவ்யக்தாய நம:

ஓம் அசிந்த்பாய நம:

ஓம் ஸூக்ஷ்மாய நம:

ஓம் ஸர்வாந்தர்யாமினே நம:

ஓம் மனோவாக தீதாய நம:

ஓம் ப்ரேமமூர்த்தயே நம: 70

ஓம் ஸுலபதுர்லபாய நம:

ஓம் அஸஹாய ஸஹாயாய நம:

ஓம் அநாதநாத தீனபந்தவே நம:

ஓம் ஸர்வ பாரப்ருதே நம:

ஓம் அகர்மானேக கர்மஸுகர்மிணே நம:

ஓம் புண்யச்ரவண கீர்த்தனாய நம:

ஓம் தீர்த்தாய நம:

ஓம் வாஸுதேவாய நம:

ஓம் ஸதாம் கதயே நம:

ஓம் ஸத்பராயணாய நம: 80

**ஓம் லோகநாதாய நம:**

**ஓம் பாவனானகாய நம:**

**ஓம் அம்ருதாம்சவே நம:**

**ஓம் பாஸ்கரப்ரபாய நம:**

**ஓம் ப்ரஹ்மசர்யதப சர்யதிஸுவ்ரதாய நம:**

**ஓம் ஸத்ய தர்ம பராயணாய நம:**

**ஓம் ஸித்தேஸ்வராய நம:**

**ஓம் ஸித்த ஸங்கல்பாய நம:**

**ஓம் யோகேஸ்வராய நம:**

**ஓம் பகவதே நம:** 90

**ஓம் பக்தவத்ஸலாய நம:**

**ஓம் ஸத்புருஷாய நம:**

**ஓம் புருஷோத்தமாய நம:**

**ஓம் சத்ய தத்வ போதகாய நம:**

**ஓம் காமாதிஸர்வ அக்ஞானத்வம்ஸினே நம:**

**ஓம் அபேதா நந்தானுபவப்ரதாய நம:**

**ஓம் ஸமஸர்வமதஸம்மதாய நம:**

**ஓம் தக்ஷிணாமூர்த்தயே நம:**

**ஓம் வேங்கடேசரமணாய நம:**

**ஓம் அத்புதானந்தசர்யாய நம:** 100

**ஓம் ப்ரபன்னார்த்திஹராய நம:**

**ஓம் ஸம்ஸாரஸர்வதுக்கக்ஷயகராய நம:**

**ஓம் ஸர்வவித்ஸர்வதோமுகாய நம:**

**ஓம் ஸர்வாந்தர் பஹிஸ்திதாய நம:**

**ஓம் ஸர்வமங்களகராய நம:**

**ஓம் ஸர்வாபீஷ்டப்ரதாய நம:**

**ஓம் ஸமரஸஸன்மார்கஸ்தாபனாய நம:**

**ஓம் ஸ்ரீ ஸமர்த்தஸத்குரு ஸாயிநாதாய நம:** 108

# ஸ்ரீ சாயி நாதா போற்றி - 306

"பாபா மாமா"

ஸ்ரீ சாயிநாதா போற்றி
சத்குரு தேவா போற்றி
சத்திய உருவமே போற்றி
சத்சித் ஆனந்தா போற்றி போற்றி

தூணிலும் இருப்பவரே போற்றி
துரும்பிலும் இருப்பவரே போற்றி
ஈ எறும்பிலும் இருப்பவரே போற்றி
எல்லா உயிரிலும் வாழ்பவரே போற்றி போற்றி

ஸப்கா மாலிக் சாயியே போற்றி
ஸ்ரத்தா எனும் நம்பிக்கையே போற்றி
சபூரி எனும் பொறுமையே போற்றி
சமாதி மந்திரானாய் போற்றி போற்றி

காத்து ரக்ஷிப்பவரே போற்றி
காருண்ய மூர்த்தியே போற்றி
கருணா சாகரமே போற்றி
கந்தோபாக் கடவுளே போற்றி போற்றி

கோதாவரி நதி நீரே போற்றி
கோதாவரி நதி தீரா போற்றி
ஷிரடி புனிதஸ்தலமே போற்றி
ஷிரடி கிராம நிவாஸரே போற்றி போற்றி

நினைத்தால் பக்தி ஷீரடியே போற்றி
துதித்தால் சக்தி ஷீரடியே போற்றி

கால் பதித்தால் முக்தி ஷீரடியே போற்றி
காசி கயா ஹரித்வார் ஷீரடியே போற்றி போற்றி

துவாரகமாயிவாசரே போற்றி
துனி கண்ட தேவா போற்றி
துளசி பிருந்தாவனரே போற்றி
தூய பிரும்மச்சாரியேபோற்றி போற்றி

உத்தமரே உந்தன் உதியே போற்றி
உலக பிணிக்கு கதியே போற்றி
வெற்றிக்கு வழி யாம் உதியே போற்றி
வேதனை போக்கும் உதியே போற்றி போற்றி

துன்பங்களை ஓட வைப்பவரே போற்றி
இன்பங்களை எளிதில் தருபவரே போற்றி
துஷ்டர்களை சம்ஹரிப்பவரே போற்றி
இஷ்டர்களுக்கு இனியவரே போற்றி போற்றி

மசூதிவாழ் மகத்துவமே போற்றி
மகாசக்தி மகோன்னதரே போற்றி
மசூதியிலிருந்து பேசும் மகானே போற்றி
மட்டில்லா மாணிக்கமே போற்றி போற்றி

தீவிரமான தெய்வமே போற்றி
தீதினைப்போக்கும் திருவே போற்றி
சுறுசுறுப்பான குருவே போற்றி
சுத்தர்கள் இதய வாசரே போற்றி போற்றி

ஆதவன் நீயே மாதவா போற்றி
அம்புலி நீயே ஆண்டவா போற்றி
ஆபத்பாந்தவ மூர்த்தியே போற்றி
ஆதாரம் உன் பாதாரம் போற்றி போற்றி

புத்தி சொல்லும் புனிதரே போற்றி
ஆசி அருளும் ஆசானே போற்றி
வரம் தரும் வள்ளலே போற்றி
வளமாக வாழவைப்பவரே போற்றி போற்றி

அடியவர்க்கு அருள்பவரே போற்றி
அபயக்கர ஆண்டவரே போற்றி
அற்புத ஆனந்த மூர்த்தயே போற்றி
அன்னதான வள்ளலே போற்றி போற்றி

சின்மய ரூபரே போற்றி
சிவமயமானவரே போற்றி
சித்தருக்கெல்லாம் சித்தரே போற்றி
சிரஞ்சீவி சித்தரே போற்றி போற்றி

உன்னைச் சரணடைந்தோம் உன்னதா போற்றி
உபகாரம் உடனருளும் உத்தமா போற்றி
உபதேசங்களின் ஊற்றே போற்றி
உனைப்பிரியோம் ஒருநாளும் போற்றி போற்றி

எங்கள் சுமைகளை தாங்குகின்றாய் போற்றி
சுமைதாங்கியான சுந்தரா போற்றி
எமை காக்கும் இறையருளே போற்றி
எம் இமை மூடினாலும் தெரியும் இறைவா போற்றி போற்றி

பதினாறு வயது பாலக சாயி போற்றி
பதிஷீரடியில் தோன்றினாய் போற்றி
பதினோரு உபதேசம் பகன்றாய் போற்றி
பார்த்தசாரதி பாபாவே போற்றி போற்றி

பகத் மெகல் சாபதியின் பக்தியே போற்றி
சாயி என்றவர் அழைத்தார் போற்றி

பாயாஜி பாயின் மைந்தரே போற்றி
பக்தஷாமா மனமகிழ்கோவே போற்றி போற்றி

சாதி ஏதுமில்லாத சமர்த்தா போற்றி
தாத்யா பட்டீலின் திருமாலவா போற்றி
சாதுரூப சாயிநாத் சத்குருவே போற்றி
யாதுமாகி நின்ற மாதவமே போற்றி போற்றி

அல்லா அச்சாகரேகா என்றாய் போற்றி
எங்கள் அல்லா சாயிபாபாவே போற்றி
நல்லார் உறவை அளிப்பவரே போற்றி
கல்லிலும் இருந்து பேசும் தெய்வமே போற்றி போற்றி

கங்கை யமுனை நீரே போற்றி
தங்கள் கால்களில் பாயும் போற்றி
மங்களம் பொங்கிடும் மகானே போற்றி
மங்காப் புகழ் மணவாளரே போற்றி போற்றி.

சதானந்த மூர்த்தியே போற்றி
அனுசுயா அத்ரிசுதனே போற்றி
அனாதநாத தீனபந்துவே போற்றி
சனாதன சாரதியே போற்றி போற்றி

வெங்கூச குருவைக் கொண்டாய் போற்றி
வேங்கடவன் திரு உருவமே போற்றி
சங்கடம் அகற்றும் சங்கரா போற்றி
என் கடன் பக்தி செய்வதே என போற்றி போற்றி

ஆதிக்கு சமமானவரே போற்றி
சம ஆதியாய் ஆனவரே போற்றி
குரு ஸ்தான் சமர்த்தரே போற்றி
சாவடி சயன மூர்த்தியே போற்றி போற்றி

நந்தா தீப நாதரே போற்றி
நவக்கிரகங்களுக்கு அரசே போற்றி
நம் நலம் காக்கும் நாயகா போற்றி
நாகசாயிநாதரே போற்றி போற்றி

கஃப்னி ஆடை கடவுளே போற்றி
சட்காயுத பாணியே போற்றி
சிலிம் நெருப்பின்றி பற்றவைப்பாய் போற்றி
பஞ்ச பூத பரிபாலனா போற்றி போற்றி

தென்முகக் கடவுள் உருவே போற்றி
ஷீரடி தக்ஷிணா மூர்த்தியே போற்றி
பண்டரி புர விட்டல் நீயே போற்றி
த்ரியம்ப கேஸ்வரா போற்றி போற்றி

நானிருக்க பயமேன் என்ற நாதனே போற்றி
நானிலத்தோர் வணங்கும் தெய்வமே போற்றி
நல்லடியார்தொழும் ஆண்டவா போற்றி
நாதியற்றோரின் நல்குருவே போற்றி போற்றி

சித்திர ரூப சாயிநாதா போற்றி
சிலாரூப சாயி தேவா போற்றி
வானில் தோன்றும் வடிவமே போற்றி
மனதுள் இருக்கும் மாமகானே போற்றி போற்றி

காமகுரோதம் அகற்றும் கடவுளே போற்றி
மதமாச்சர்யம் நீக்கும் மாதவமே போற்றி
பில்லி சூன்யம் அண்டவிடா ஆண்டவா போற்றி
பெரும்பகை அகற்றும் பெருமானே போற்றி போற்றி

அகல் விளக்கில் நீருற்றி நீ ஏற்றினாய் போற்றி
அகலாத பக்திதனை எனக்கருள்வாய் போற்றி

சமாதியாய் ஆனபின் சரித்திரமானாய் போற்றி
சத் சரித்ரசப்தாஹ சத்குருவே போற்றி போற்றி

கோதுமை மாவை எல்லையில் கொட்டினாய் போற்றி
காலராவை காணாமல் ஆக்கினாய் போற்றி
பிளேக் நோயை நீ ஏற்று பிள்ளைதனை காத்தாய் போற்றி
பக்தனுக்காக இன்னுயிர் ஈந்தவரே போற்றி போற்றி

அன்னதானத்தை பிரதானமாக்கினாய் போற்றி
கொதிக்கும் அன்னத்தை கைவிட்டு கிளறினாய் போற்றி
நெருப்பில் கரம் நீட்டி குழந்தையை காத்தாய் போற்றி
நானிருக்க பயமேன் என்ற நல்லகுருவே போற்றி போற்றி

பக்திக்கு உடன் பலனளிக்கும் பரமா போற்றி
பல்லி சொல்லுக்கு அர்த்தம் சொன்ன பரந்தாமா போற்றி
பக்தன் குரல் கேட்டு பக்கத்தில் வருபவரே போற்றி
பாராளும் பாபாவே உன் நாமம் போற்றி போற்றி

காகட ஆரத்தியில் கனிந்துருகும் காந்தரே போற்றி
மத்யான் ஆரத்தியில் மனமுருகும் மகானே போற்றி
தூப ஆரத்தியில் துள்ளி வரும் வள்ளலே போற்றி
ஷேஜ் ஆரத்தியில் மகிழும் மலரவனே போற்றி போற்றி

ஜனங்களை கவர்ந்திழுக்க செய்பவரே போற்றி
தனங்களை கவர்ந்திழுக்க வைப்பவரே போற்றி
மனங்களை கவரவைக்கும் மகிமைநாதா போற்றி
குண நலங்களை காக்கும் குருவே போற்றி போற்றி!

ஜெயங்களை அள்ளித் தருபவரரே போற்றி
பயங்களை போக்கும் பகவானே போற்றி
அபயம் அளிக்கும் ஆண்டவா போற்றி
சுபங்களை தரும் சுந்தரமூர்த்தியே போற்றி போற்றி

**பூரண பிரும்ம சுகஸ்வரூபரே போற்றி**
**மானுடரூப மஹாவிஷ்னுவே போற்றி**
**அர்த்தநாரி உமை நீயே போற்றி**
**காமனை எரித்த சிவன் நீயே போற்றி போற்றி**

**மனித உருவ மஹேஸ்வரா போற்றி**
**ஞான வான தினகரா போற்றி**
**காருண்யம் மிகுந்த கருணாகரா போற்றி**
**பிறவிப் பிணிக்கு மருந்துன் பதமே போற்றி போற்றி!**

**வேதங்களை போற்றியவா போற்றி**
**பேதமில்லா கருணாகரா போற்றி**
**நாதமதில் வயித்தவரே போற்றி**
**போதும் என்ற மனம் தந்தவா போற்றி போற்றி**

**புலிக்கு மோட்சம் தந்த புண்ணியரே போற்றி**
**குதிரை முன் செல்ல பின்னர் வலம் வந்தாய் போற்றி**
**பைரவருக்கு தினம் அன்னமிட்ட வைரவா போற்றி**
**சகல ஜீவனிகளிடத்திலும் அன்பு கொண்டவரே போற்றி போற்றி**

**கர்மவினை போக்கும் தர்மதேவா போற்றி**
**தர்மத்தை காப்பாற்றும் தயாபாரா போற்றி**
**தயைபுரிந்து எமைகாக்கும் தரணீதரா போற்றி**
**தாயுமான என் தந்தை பாபாவே போற்றி போற்றி**

**நம்பியவர்களின் நடராஜரே போற்றி**
**பொறுத்தவர்களுக்கு பொக்கிஷமே போற்றி**
**எங்கள் இதயவாசரே போற்றி**
**எங்கள் இனிய ராஜாவே போற்றி போற்றி**

**அற்புத ஆனந்த ஆச்சார்யரே போற்றி**
**அத்வைத சித்தாந்த பொருளுரைத்தாய் போற்றி**

அனைத்து பிறப்புகளையும் காப்பவரே போற்றி
அனைத்துபிறவிகளையும் அறிந்தவரே போற்றி போற்றி

பாம்பின் விடத்தை முறித்தவரே போற்றி
பக்தனின் திடத்தை வளர்ப்பவரே போற்றி
திக்கற்றோரின் தெய்வமே போற்றி
திகட்டாத அருள் சுனையே போற்றி போற்றி

நானாவின் நல்லகுருநாதா போற்றி
நானாவிற்கு கீதையின் பொருளுரைத்தாய் போற்றி
எங்களுக்கு பாதை காட்டும் பாபாவே போற்றி
எங்கள் கீதை சத்சரித்ரம் தந்தாய் போற்றி போற்றி

நவவித பக்திக்கு உருகும் நல்ல குருநாதா போற்றி
தவயோக தத்துவ உருவே போற்றி
சிவனையே விடாத சனியை கல்லாக்கினாய் போற்றி
கல்லாக்கி சிங்கனாப்பூரில் வழிபடவைத்தாய் போற்றி போற்றி

சாந்த் பாட்டீலுடன் புகைததாய் போற்றி
சர்வ நோய்களையும் பகைத்தாய் போற்றி
தொலைந்த குதிரையை வரவழைத்தாய் போற்றி
சாயிநாத சத்குருவே போற்றி போற்றி

நாணாவிற்கு விஸ்வரூப காட்சி தந்தாய் போற்றி
நாளுமதை நினைத்து உருகுவோம் போற்றி
நாத்தேட் ரத்தன் ஜிக்கு அருளியவரே போற்றி
நாடாளும் நாகசாயி நாதரே போற்றி போற்றி

ஏழைகளின் சிந்தாமணியே போற்றி
பாவங்களை போக்கும் புண்ணியரே போற்றி
பக்க துனையாயிருக்கும் பகவானே போற்றி
பக்தர்களின் பவித்ர புகலிடமே போற்றி போற்றி

பிறப்பு இறப்பற்ற பிரபுவே போற்றி
எப்போதும் ஜீவனுடனிருப்பவரே போற்றி
எந்நாளும் துணை நிற்கும் என்னவா போற்றி
மனதை மயக்கும் மன்னவா போற்றி போற்றி

விஞ்ஞான மூர்த்தியே போற்றி
அஞ்ஞானம் அகற்றுபவரே போற்றி
மெஞ்ஞான திருவிளக்கே போற்றி
திருஞானச்சுடரொளியே போற்றி போற்றி

புண்ணியநாதா புருஷோத்தமா போற்றி
சாந்த மூர்த்தி ஆனந்தக்கண்ணா போற்றி
வைத்தியநாத சாயிநாதா போற்றி
வைத்தியருக்கெல்லாம் வைத்தியரே போற்றி போற்றி

சின்னப்பலகையில் சயனித்தவரே போற்றி
கொட்டும் மழையை நிறுத்தியவரே போற்றி
எரியும் தீயை அடக்கியவரே போற்றி
ஏழைகளின் இனிய நாதரே போற்றி போற்றி

லக்ஷ்மிக்கு நவநிதி தந்த குபேரா போற்றி
சரஸ்வதியின் குரு ஹயக்ரீவரும் நீயே போற்றி
துர்க்கையின் மைந்தா தூயவா போற்றி
துவாரகமாயி தெய்வமே போற்றி போற்றி

உதிகொண்டு நோய்பல தீர்ப்பவரே போற்றி
கதி என்று வந்தோரை காப்பவரே போற்றி
மதிக்குள்ளே அமர்ந்த மானிடதெய்வமே போற்றி
சதிகளை மாய்க்கும் சாயிபாபாவே போற்றி போற்றி

குழந்தை இல்லா குறை போக்கும் குணாளனே போற்றி
இல்லை என்ற நிலை நீக்கும் இனியவா போற்றி

பிள்ளை செல்வங்களை போற்றுபவரே போற்றி
எல்லாச்செல்வங்களும் தரும் எதிராஜா போற்றி போற்றி

மஹாராஜ ராஜேஸ்வரா போற்றி
குபேரனுக்கும் குபேரனே போற்றி
உலகின் ஒரே காப்பாளரே போற்றி
ஒப்பாரில்லா உயர்ந்தவரே போற்றி போற்றி

சாந்த சித்தரே மஹாஞானியே போற்றி
சாயிநாதா தயாகுனா போற்றி
கருணை உள்ளம் கொண்டவா போற்றி
மாயை இருளை விலக்குபவரே போற்றி போற்றி

ஹேமத்பந்த் ஆக்கி தபோல்கரை எழுதவைத்தாய் போற்றி
எனை நினைத்தால் எழுந்து வரும் என்றவரே போற்றி
எங்கள் குலம் தழைக்க வந்தவரே போற்றி
சாயிராமாயணமாம் சத்சரிதம் தந்த சாயியே போற்றி போற்றி

குருவின் தேவையை உணர்த்தியவறே போற்றி
குருவருளே திருவருள் என்றவரே போற்றி
கும்மிருட்டிலும் குருஒளி வழிகாட்டி என்றவரே போற்றி
குருவுக்கும் குருவான சத்குருவே போற்றி போற்றி

ஓம் சாயி நாதத்தில் ஒளிரும் சக்தியே போற்றி
ஸ்ரீ சாயி நாமத்தின் சிறப்புகளே போற்றி
ஜெய ஜெய சாயிகோஷத்தில் ஜெலிப்பவரே போற்றி
ஒரு போதும் உனை மறவோம் உன்னதனே போற்றி போற்றி

நாம ஜெபமே நல்ல மார்க்கமென்றாய் போற்றி
நாளும் உன் நாமம் ஜெயிப்போம் போற்றி
சாயிராம் சாயிராம் என துதிப்போம் போற்றி
சகலமும் அருளும் சர்வேஸ்வரா போற்றி போற்றி

ஸ்ரீ ராமகிருஷ்ணா உருவானவரே போற்றி
சிவாய நம ஸ்வருப சின்மயரே போற்றி
மாருதி விட்டல் மறு உருவமே போற்றி
விரும்பும் தெய்வமாய் ஆனவரே போற்றி போற்றி

தம்போலியுடன் மல்லுக்கு நின்றாய் போற்றி
தோல்வியை துவக்கமாக்கிய துறவியே போற்றி
எளிமையை இறைசாதனமாக்கினாய் போற்றி
எங்கும் நிறை ஏழை பங்காளா போற்றி போற்றி

விரும்புவதை தரும் வேணுகோபாலா போற்றி
வேப்பமரத்தின் கீழ் அமர்ந்த வேந்தரே போற்றி
சாக்குத்துணியில் அமர்ந்த சாதகா போற்றி
சதங்கை கட்டி ஆடும் மோகன கிருஷ்ணா போற்றி போற்றி

ராமநவமியையும் உருஸ் விழாவையும் ஒன்றாக்கினாய்போற்றி
ராமராஜ்யத்தின் நல்லினக்கப்பிதாவே போற்றி
மதங்களை கடந்த மனிதநேயரே போற்றி
மதஇடர்களிடமிருந்து மானுடத்தை காப்பவரே போற்றி போற்றி

அன்னதானத்தை பிரதானமாக்கினாய் போற்றி
அன்னத்திற்கு முன் யாவரும் சமமென்றாய் போற்றி
அன்னம் போல் நல்லதை புரிய வைத்தாய் போற்றி
எண்ண எண்ண திகட்டா திவ்யரே போற்றி போற்றி

பக்தனின் பக்திக்கு மயங்கும் பரந்தாமா போற்றி
பகதர்கள் இதயத்துள் வசிப்பவரே போற்றி
பக்தர்கள் பயமகற்றும் பரமகுரு போற்றி
பக்திக்கு சக்தி தரும் சத்குருவே போற்றி போற்றி

உண்ண உணவளிக்கும் உத்தமா போற்றி
உடுத்த உடையளிக்கும் உன்னதா போற்றி



**வசிக்க இடமளிக்கும் வசந்தரே போற்றி**
**ஏற்றதோர் கல்விதரும் ஏந்தலே போற்றி போற்றி**

**தனம் அள்ளித்தரும் தயாளரே போற்றி**
**மாங்கல்ய பலம் தரும் மணவாளா போற்றி**
**மனைவி மக்கள் நலம் காப்பவரே போற்றி**
**சுற்றத்தாரை சுகமாக வாழ வைப்பவரே போற்றி போற்றி**

**அகமகற்றி ஜெகம் காக்கும் ஜெகன்னாதா போற்றி**
**சுகம் தந்து தினம் காக்கும் சுந்தரனே போற்றி**
**ஏகம் நித்யம் நான் தொழும் நாதனடி போற்றி**
**இகம்பரம் இரண்டிற்கும் இறைவன் நீயே போற்றி போற்றி**

**ஸ்ரீ தத்தாத்ரேய ஸ்வரூபா போற்றி**
**ஸ்ரீ பாதவல்ல பாவதாரா போற்றி**
**ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி நாதா போற்றி**
**ஸ்வாமி சமர்த்த சத்குருவே போற்றி போற்றி**

**பொங்கும் மங்களம் தரும் பகவானே போற்றி**
**எங்கும் உந்தன் திரு நாமமே போற்றி**
**எதற்கும் யார்க்கும் அஞ்சோம் போற்றி**
**நீ இருக்க பயமெதற்கு பாபாவே போற்றி போற்றி**

**எங்கள் இதய ராஜாதி ராஜரே போற்றி**
**யோகியர்க்கெல்லாம் மஹாராஜரே போற்றி**
**பரப்பிரும்ம ஸ்வரூப பகவானே போற்றி**
**சச்சிதானந்த சமர்த்த சத்குருநாதா போற்றி**
**சிந்தையில் நின்றாடும் உன் திருப்பாதங்கள் போற்றி**
**சீரடிப்பதி வாழுமெங்கள் ஸ்ரீசாயிநாத தெய்வமே போற்றி போற்றி**

போற்றி மாலை முற்றிற்று

# ஷீரடி ஸாயி திருக்கவசம்

திருவளரும் சீரடிவாழ் ஸ்ரீஸாயி
நாதனவன் சிரசைக் காக்க
அருள்வளரும் ஸ்ரீஸாயி அமலனவன்
நெற்றியினை அமர்ந்து காக்க
பொருள்வளரும் ஸ்ரீஸாயி புனிதனவன்
வதனமதைப் பொலிந்து காக்க
தெருள்வளரும் ஸ்ரீஸாயி தேவனவன்
கண்ணிரண்டும் தினமும் காக்க

புவியிறைஞ்சும் ஸ்ரீசாயி புருவங்கள்
இரண்டினையும் புகழ்ந்து காக்க
செவியிரண்டும் ஸ்ரீஸாயி சேவகன்தான்
எந்நாளும் சேர்ந்து காக்க
தவமுனிவன் ஸ்ரீஸாயி பாபாஎன்
தலைமயிரைத் தழைந்து காக்க
நவமணியான் ஸ்ரீஸாயி பாபாஎன்
நாசியினை நயந்து காக்க

கண்கண்ட ஸ்ரீஸாயி தெய்வமவன்
இருகன்னம் கனிந்து காக்க
விண்கண்ட ஸ்ரீஸாயி விமலனவன்
கண்டமதை விரைந்து காக்க
பண்கண்ட ஸ்ரீஸாயி பரமனவன்
தோளிரண்டும் பரிந்து காக்க
மண்கண்ட ஸ்ரீஸாயி மாதவன்என்
மார்பகத்தை மகிழ்ந்து காக்க

தூயசுடர் வடிவான ஸாயிஅண்ணல்
வலதுகரம் துணிந்து காக்க
நேயமுறும் ஸ்ரீஸாயி நீதனவன்
இடதுகரம் நிதமும் காக்க
ஆயமறை முடிவான ஸாயிபரன்
மணிவயிற்றை அறிந்து காக்க
தேயமெலாம் துதிசெய்யும் ஸாயிவள்ளல்
இடுப்பதனைத் தெரிந்து காக்க

குருஸாயி பகவனவன் கரவிரல்கள்
ஈரைந்தும் குழைந்து காக்க
உருவோங்கும் ஸ்ரீஸாயி உத்தமன்என்
பற்களினை உவந்து காக்க
கருவோங்கும் ஸ்ரீஸாயி பாபாஎன்
வளர்நாவைக் களித்துக் காக்க
பெருமானாம் ஸ்ரீஸாயி போதனென்றன்
நெஞ்சமதைப் பெரிதும் காக்க

கனிவுமிகு ஸ்ரீஸாயி கடவுளவன்
குறியதை எக்காலும் காக்க
இனிமைமிகு ஸ்ரீஸாயி இறையவன்என்
வலக்காலை இனிது காக்க
தனிமைமிகு ஸ்ரீஸாயி இறையவன்என்
வலக்காலை இனிது காக்க
தனிமைமிகு ஸ்ரீஸாயி பதியவன்என்
இடக்காலைத் தாவிக்காக்க
பனிஇருள்தீர் ஸ்ரீஸாயி பாபாஎன்
பாதவிரல் பத்தும் காக்க

இருதொடையும் ஸ்ரீஸாயி ஈசனவன்
எஞ்ஞான்றும் இறங்கிக் காக்க
திருமுதுகைப் பிடரியினை ஸ்ரீஸாயி
வானவன்தான் சிறந்து காக்க
தருமதுரை ஸ்ரீஸாயி என்வாயும்
இதழ்இரண்டும் தவழ்ந்து காக்க
அருநிதியாம் ஸ்ரீஸாயி ஆண்டவன்
அங்கமெலாம் அழகாய் காக்க

கரியவிழி படைத்தநமன் வருங்காலம்
ஸ்ரீஸாயி கடிதிற் காக்க
பரியபகை வஞ்சகர்கள் எதிர்த்திடுங்கால்
ஸ்ரீஸாயி பேணிக்காக்க
அரியகொடும் பிணிபூதம் அணிகிடுங்கால்
ஸ்ரீஸாயி அமைந்து காக்க
உரியவிஷப் பூச்சிகளால் இடரின்றி
ஸ்ரீஸாயி உடனே காக்க

எத்திக்கும் எப்போதும் எவ்விடத்தும்
ஸ்ரீஸாயி என்னைக் காக்க
பக்தியுடன் பணிபுரியும் வேலையெலாம்
ஸ்ரீஸாயி பாபா காக்க
முத்திநலங் கொடுத்தென்னை ஸ்ரீஸாயி
இராமனவன் முன்னே காக்க
சித்தியெலாம் தந்தென்னைச் சீரடிசேர்
ஸ்ரீஸாயி சித்தன் காக்க காக்க



# ஸ்ரீ சாயி துக்க நிவாரண துதி மாலை

"பாபா மாமா"

ஓம் ஸ்ரீ மஹா கணேஷ் மஹராஜ்கி ஜே
ஹரிஹரபிரும்ம ஸ்வரூபருக்கீ ஜே
ஓம் பரப்பிரும்ம பரமாத்மாகி ஜே
துர்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி மாயிக்கி ஜே
சீதா ராமசந்திர மூர்த்திக்கீ ஜே
பக்தஸ்ரீ ஆஞ்சநேய மஹராஜ்கி ஜே
சகல குல தேவதாவுக்கி ஜே
ஸ்ரீ சத்குரு சாயிநாத் மஹராஜ்கி ஜே
ஸ்ரீ சகலகுரு பரம்பரா ஸ்வாமிஜிகி ஜே
ஸ்ரீ பாண்டுரங்க விட்டல் மஹராஜிகீ ஜே
ஸ்ரீ தத்தாத்ரேய மஹராஜ்கி ஜே

சீரடிப்பதி வாழ் சின்மய ரூபா
சிறப்பாய் காக்கும் சீரிய தேவா
பக்தர்கள் போற்றும் அனாத நாதா
எங்களுடன் வசிக்கும் சத்குரு பாபா

கணபதி, அல்லா, ஈஸ்வர் நீங்கள்
நாங்கள் போற்றும் நரசிம்ம ஸ்வாமி
பிரும்மா, விஷ்ணு, சாயிமஹேஸ்வர்
சரஸ்வதி லக்ஷ்மி சாட்ஷாத் சாயி

தந்தையும் நீயே தாயும் நீயே
தயை பல புரியும் துவாரக மாயி
முந்தை வினைகளை முற்றும் அழித்து
முக்தி அளிக்கும் முடிவில்லா முதலே

நிரஞ்ஜன், ஜித்தேந்தர், ஜகதீஸ்வர் நீ
மஹாவீர், தீர்த்தங்கர், புத்தரும் நீயே
அவுலியா சுபங்கர் ஸ்வாமி சமர்த்தர்
அல்லா மாலிக்எல்லாம் சாயி

பாவங்களை போக்கும் பாபநாசகர்
பக்தர்கள் போற்றும் பவித்ரபாதர்
இறையில் நீயே மனம் படைத்தவர்
எதைக் கேட்டாலும் எளிதே தருபவர்

தனமும் தானியமும் சந்தானமுமென
தினம் நான் கேட்டதைவரமாய் தந்தாய்
பொன்னும் பொருளும் புகழும் தந்தாய்
போதுமென்றென் மனம் எண்ண வில்லையே

சொத்து சுகம் தனை நாடியதென்மனம்
சொந்த உறவுகள் சுமையாய் போனது
பந்தங்களைப்பற்றி எண்ணமே இல்லை
பாவ புண்ணியங்கள் பார்க்கவே இல்லை.

நல்ல நண்பர்களை கர்வத்தால் இழந்தேன்
சொல்ல வந்தவரை தூக்கி எறிந்தேன்
கட்டிய மனைவி, மகன்கள், மகள்கள்
காட்டிய அன்பை மதிக்கவே இல்லை.

நல்லவை யெல்லாம் தந்தாய் சாயி
கெட்டதைத் தேடிக் கொண்டதுநானே
எல்லாம் கேட்டேன் தந்தாய் சாயி
நிம்மதியை கேட்க நான் மறந்தது ஏனோ.

எனக்கே ஒன்றும் புரியவே இல்லை
நல்லது கெட்டது தெரியவே இல்லை

ஒரு பக்கம் பாழும் கிணறைக் கண்டேன்
மறுபக்கம் படுகுழி இருக்கக் கண்டேன்

பகைவர்கள் கோபம் கட்டுக்கடங்காது
எல்லா பக்கமும் எரியும் நெருப்பாய்
துக்கமும் துயரமும் தொடருகிறதே
தெரிந்தும் இன்னும் மவுனம் ஏனோ

வாட வைப்பது துக்கமும் துயரமும்
வாழ வைப்பவர் சத்குரு சாயி
அல்லல் தீர்த்து அருள்பல புரிவாய்
வள்ளல் சாயி வழி வகை செய்வாய்.

அழுது அழுது அரண்டு போகிறேன்
வருத்தத்தில் மூழ்கி வாடிப் போகிறேன்
தொழுது உன் பாதம் சரணடைகிறேன்
விழிநீரை துடைத்து ஒரு வழிகாட்டு

வாழ்க்கைப் படகை நெறியாய் செலுத்த
வாழும் தெய்வமே நல்வழி காட்டு
அக்கரையோடு நீயும் அக்கரை சேர்ப்பாய்
நட்டாற்றில் மூழ்காமல் காத்து அருளுவீரே.

நான் உறுப்பெற்றது உங்கள் படைப்பு
நான் உருப்பட்டதும் உங்கள் கிருபையே
உரு வாக்கிய சத் குரு சாயிநாதரே
உங்கள் அடிமைக்கு வாழ்வளிப்பீரே.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொழுதும்
ஒவ்வொரு சூழலும் ஒவ்வொரு நிலையும்
உனை நான் பிரியாவரம் வேண்டும் நாதா
உடனே அதை நீ தரவேண்டும் பாபா

படைத்தாய் உலகை நந்தவனமாக
பூத்தோம் அதிலே புஷ்பங்களாக
பூக்கள் முழுவதும் பூத்துக் குலுங்க
ஒரு பூ மட்டும் வாடுதல் முறையோ.

படைத்தவன் நீயே பொறுப்பாளனாவாய்
படைப்பினில் தவறுகள் ஏற்படலாமா
தப்பும் தவறும் எங்கள் இயல்பு
தயைதனை புரிதலோ உங்கள் சிறப்பு

கஷ்டமும் கவலையும் சூழும் போது
காத்திடச் சொல்லி கதறுதல் தவறோ
கன்றுகள் நாடும் காமதேனுவே
கனிவோ டென்னை காத்தருள்வாயே

நம்பிக்கை பொறுமை இரண்டையும் தந்தாய்
நம்பிடும் எங்களை சோதனை செய்தாய்
வேதனை போக்கி சாதனை புரிய
வேந்தன் உந்தன் மகிமையை காட்டு

சீரடிப்பதியில் கால்தனை பதித்தாய்
சீரடி திவ்விய க்ஷேத்திரமானது
புண்ணியபாதம் உன்திருப்பாதம்
பற்றும் நாங்களும் பலன் பலபெறுவோமே

கஷ்ட நிவாரண துதிமாலை இதனை
கவலைகள் வரும் போது மட்டுமல்லாமல்
அனுதினம் ஆசாரத்துடன் படிக்க
அண்டாது துன்பம் ஒருபோதும் நம்மை

எரியும் நெருப்பில் தன் கரம் நீட்டி
குழந்தையை மீட்ட கருணா மூர்த்தி

நம்மையும் என்றும் காத்தருள் புரிவார்
நம்பிக்கை வைப்போம் நாதரின் மேலே

நம் செயல் அனைத்தும் அவர் அறிவாரே
நாளை நடப்பதை அறிவார் அவரே
கெட்டவை நம்மை தீண்டா திருக்க
அவர் நாமம் சொல்லி அமைதி அடைவோம்

சாயிராம் சாயிராம் சாயிராம் சாயிராம்
சாயிராம் சாயிராம் சாயிராம் சாயிராம்

ஸமர்த்த சத்குரு சாயிநாத்
மஹராஜ்கி -ஜே

## சீரடி சாயி தியானம்
## (108 ராம நாமம் உள்ளடக்கியது)

1. சீரடி சாயி தர்மசாயி சத்குருசாயி ராம்ராம்
அரியும்சாமி அரனும்சாயி அயனும்சாயி ராம்ராம்
அறிவும்சாயி உறவும்சாயி துறவும்சாயி ராம் ராம்
புறமும்சாயி அகமும்சாயி நிறைவும்சாயி ராம்ராம்
எங்கும்சாமி எதிலும்சாயி என்றும்சாயி ராம்ராம்
மயிலைநர சிம்ஹகுருஜி போற்றும் சாயி ராம்ராம்

2. புத்திசாயி பக்திசாயி முக்திசாயி ராம்ராம்
ஸித்திசாயி ருத்திசாயி சக்திசாயி ராம்ராம்
புத்ரசாயி பந்துசாயி மார்க்கசாயி ராம்ராம்
மித்ரசாயி வர்க்கசாயி தீர்க்கசாயி ராம்ராம்
எங்கும்சாயி எதிலும்சாயி என்றும்சாயி ராம்ராம்
மயிலைநர சிம்ஹகுருஜி போற்றும் சாயி ராம்ராம்

3. ஆதிசாயி மீதிசாயி நீதிசாயி ராம்ராம்
ஜோதிசாயி காந்திசாயி சாந்திசாயி ராம்ராம்
பாலசாயி பவனசாயி பக்தசாயி ராம்ராம்
கோலசாயி ஸ்தூலசாயி காலசாயி ராம்ராம்
எங்கும்சாயி எதிலும்சாயி என்றும்சாயி ராம்ராம்
மயிலைநர சிம்ஹகுருஜி போற்றும் சாயி ராம்ராம்

4. உருவும்சாயி உண்மைசாயி திருவும்சாயி ராம்ராம்
குருவும்சாயி ஜீவன்சாயி வழியும்சாயி ராம்ராம்
பதியும்சாயி கதியும்சாயி விதியும்சாயி ராம்ராம்
நிதியும்சாயி நினைவும்சாயி நிகழ்வும்சாயி ராம்ராம்
எங்கும்சாயி எதிலும்சாயி என்றும்சாயி ராம்ராம்
மயிலைநர சிம்ஹகுருஜி போற்றும் சாயி ராம்ராம்

5. கல்விசாயி கண்ணும்சாயி கருத்தும்சாயி ராம்ராம்
செல்வம்சாயி க்ஷேமம்சாயி சேவைசாயி ராம்ராம்
தீனசாயி மோனசாயி ஞானசாயி ராம்ராம்
கானசாயி கர்மசாயி தீர்த்தசாயி ராம்ராம்
எங்கும்சாயி எதிலும்சாயி என்றும்சாயி ராம்ராம்
மயிலைநர சிம்ஹகுருஜி போற்றும் சாயி ராம்ராம்

6. சத்யசாயி தர்மசாயி அர்த்தசாயி ராம்ராம்
நித்யசாயி மாயசாயி தத்வசாயி ராம்ராம்
தத்தசாயி சேஷசாயி வேதசாயி ராம்ராம்
சுத்தசாயி போதசாயி கீதசாயி ராம்ராம்
எங்கும்சாயி எதிலும்சாயி என்றும்சாயி ராம்ராம்
மயிலைநர சிம்ஹகுருஜி போற்றும் சாயி ராம்ராம்

7. அன்னைசாயி தந்தைசாயி அகிலம்சாயி ராம்ராம்
சின்னம்சாயி சிறப்புசாயி சீரும்சாயி ராம்ராம்
சந்த்ரசாயி சூர்யசாயி தாராசாயி ராம்ராம்

**மந்த்ரசாயி யந்த்ரசாயி தந்த்ரசாயி ராம்ராம்**
**எங்கும்சாயி எதிலும்சாயி என்றும்சாயி ராம்ராம்**
**மயிலைநர சிம்ஹகுருஜி போற்றும் சாயி ராம்ராம்**

8. **கமலசாயி விமலசாயி கருணைசாயி ராம்ராம்**
**அமலசாயி நிமலசாயி ஸமர்த்தசாயி ராம்ராம்**
**வேரும்சாயி வேள்விசாயி வேட்கைசாயி ராம்ராம்**
**ஊரும்சாயி பேரும்சாயி பெருமைசாயி ராம்ராம்**
**எங்கும்சாயி எதிலும்சாயி என்றும்சாயி ராம்ராம்**
**மயிலைநர சிம்ஹகுருஜி போற்றும் சாயி ராம்ராம்**

9. **உடலும்சாயி உயிரும்சாயி உள்ளம்சாயி ராம்ராம்**
**கடலும்சாயி மலையும்சாமி காட்சிசாயி ராம்ராம்**
**எறும்பும்சாயி ஈயும்சாயி ஜீவன்சாயி ராம்ராம்**
**துரும்பும்சாயி துணையும்சாயி தூய்மைசாயி ராம்ராம்**
**எங்கும்சாயி எதிலும்சாயி என்றும்சாயி ராம்ராம்**
**மயிலைநர சிம்ஹகுருஜி போற்றும் சாயி ராம்ராம்**

நவமணி மாலை போன்று நன்கமைந்துள்ள இந்த ஸ்ரீ ஸாயிநாதர் கவசத்தை நாள்தோறும் காலை, மாலை அன்பர்கள் ஓதிவரின் எவ்விடத்திலும் எந்த நேரத்திலும் எதனாலும் எவ்வித இடையூறும் நேராவண்ணம் ஸ்ரீ ஷீரடி ஸாயிபாபா முன்னின்று காத்து முழு அனுக்ரஹம் புரிவார் என்பது திண்ணம்.



## மங்கள ஆர்த்தி

ஸ்வாமி ஸாயி நாதாய ஷிரடி க்ஷேத்ரவாஸாய
மாமகா பீஷ்டதாய மஹிதமங்களம்.

லோகநாதாய பக்தலோக ஸம்ரக்ஷகாய
நாகலோக ஸ்துதயாய நவ்யமங்களம்

பக்தப்ருத்த வந்திதாய ப்ரஹ்மஸ்வரூபாய
முக்தி மார்க்க போதகாய பூஜ்யமங்களம்

ஸத்யதத்வ போதகாய ஸாதுவேஷாய தே
நித்ய மங்கள தாயகாய நித்ய மங்களம்.

## உதிஸ்லோகம்

ரமதே சாயி ராம் ஆவோஜி
உதியாங்கி கோணியா லாவோஜி
ஓம் சாயி ஸ்ரீ சாயி ஜெயசாயி ஜெயசாயி.



# ஸ்ரீ ஸாயிபாபாவின் பதினோரு உபதேசமொழிகள்

1. ஷீரடி திருத்தலத்தில் எவன் காலடி வைக்கிறானோ அவனுடைய துன்பம் ஒரு முடிவை அடைந்து சுகத்தை அடைகிறான்.

2. துவாரகமாயியை அடைந்த மாத்திரத்தில் பெரும் துன்பத்திற்கு உள்ளானவர்களும் மிகுதியான மகிழ்ச்சியை அடைவார்கள்.

3. இவ்வுலகை விட்ட பிறகும் நான் சர்வ சக்தியுடன் வேலை செய்வேன்.

4. என்னுடைய சமாதி என் பக்தர்களுக்கு அநேக ஆசீர்வாதங்களையும், புத்திமதிகளையும் கொடுக்கும்.

5. என்னுடைய பூத உடல் என் சமாதியிலிருந்தும் பேசும்.

6. என்னுடைய சமாதியில் இருந்து கொண்டே நான் மிகவும் சுறுசுறுப்பாகவும் வீரியத் துடனும் செயல் புரிவேன்.

7. என்னிடம் வருபவர்களுக்கும் என்னைத் தஞ்சம் அடைபவர் களுக்கும், என் உபதேசத்திற்காக என்னிடம் தீவிர நம்பிக்கை உள்ளவர்களுக்கும் நான் எப்பொழுதும் உயிருடன் இருக்கிறேன்.

8. நீ என்னை நோக்கி ஆச்ரயித்தால் நான் உன்னைக் கடாக்ஷிக்கிறேன்.

9. நீ என் பேரில் உன் பளுவை சுமத்தினால் நான் நிச்சயமாக அதைத் தாங்குவேன்.

10. நீ என் உபதேசத்திற்காகவும் உதவிக்காகவும் என்னை அடைந்தால் அவைகளை உடனே நான் உனக்குக் கொடுப்பேன்.

11. என்னுடைய பக்தர்களுடைய வீட்டில் ஒரு போதும் தேவை என்பதே இருக்காது.